# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்
திரு. இரா. வாழவந்தான், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம்,
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
தொலைபேசி எண்: 0427-2448625
email id: ddslmregion@gmail.com

பெறுநர்
திரு. V.S.சரவணபவா,
பாரதியார் வீதி,
அம்மாபேட்டை
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண். 2630/2018 சேம –3 நாள். .01.2019

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம் – அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம் – வெள்ளிதிருப்பூர் ஊராட்சி மற்றும் கிராமம் – சர்வே எண். 491/1A–ல் அமையும் 2.67 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் – ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தனி அலுவலர், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளிதிருப்பூர் ஊராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண்.1345/2017, நாள். 15.07.2017 மற்றும் 1315/2017/ஆ2, நாள். 24.12.2018.
2. மனுதாரர் விண்ணப்பம் நாள். 12.04.2018 மற்றும் 08.01.2019.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 25.04.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 14619/88/பிசிசி, நாள். 27.04.2014.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 40483/00/எல்ஏ1, நாள். 07.11.2002.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012.
7. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, ஈரோடு அவர்களின் அறிக்கை கடிதம் எண். அ4/4897/2017(68), நாள். 15.02.2018.
8. அரசாணை எண்.112, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 22.06.2017.
9. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.

------

பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3–ல் சுட்டிய 25.04.2018 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை 2–ல் சுட்டிய கடிதம் நாள். 24.12.2018–ன் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் எண். 3222/2018. நாள். 14.11.2018 பெறப்பட்டதைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இறுதி ஒப்புதலை வரைபடங்கள் உட்பட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

நகல்
தனி அலுவலர்,
அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம்,
வெள்ளிதிருப்பூர் ஊராட்சி,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

தனி அலுவலர் /வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), அம்மாபேட்டை அவர்களின்
செயல்முறைகள் ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.மா.சுந்தரவடிவேலு.,

ந.க.எண்.1315/2017/ஆ2 நாள்:04.04.2019.

**பொருள்**: மனைப்பிரிவு ஒப்புதல் - ஈரோடு மாவட்டம் - அம்மாபேட்டை வட்டாரம் - வெள்ளித்திருப்பூர் ஊராட்சி/கிராமம் - ச.எண். 491/1A-ல் அமையும் 2.67 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி அளித்தது - ஆணை வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

**பார்வை**:
1. அரசாணை (நிலை) எண் : 79இ வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைஇ நாள்:04.05.2017.
2. அரசாணை (நிலை) எண் : 112இ வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைஇ நாள்:22.06.2017.
3. துணை இயக்குநர் ஊரமைப்புத்துறை, சேலம் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்:2630/2018 சேம-3 நாள்:21.01.2019.
4. இவ்வலுவலக ந.க.எண்:1315/2017/ஆ2 நாள்:25.04.2018 மற்றும் 24.12.2018.

*** *** ***

**ஆணை**:

பார்வை 3-ல் காணும் கடிதத்தில், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளித்திருப்பூர்/கிராமம் ஊராட்சி ச.எண். 491/A-ல் அமையும் 2.67 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம(சே) எண்.27/2019, என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளர் திரு.சரவணபவா, பாரதியார் வீதி, அம்மாபேட்டை, அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் - 638311. இவருக்கு சேலம், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கான வரைபடம் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு, வீட்டு மனைப் பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள குறித்து பிரஸ்தாப இடத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.)/ உதவி பொறியாளர் நேரில் ஆய்வு செய்ததில் வரைபடத்தில் குறிப்பிட்டவாறு சாலைகள் மற்றும், பூங்கா அம்மாபேட்டை சார் பதிவாளர் அலுவலக தான ஆவண எண்:3222/2018, நாள்:14.11.2018 ன் படியும் பதிவு செய்து வெள்ளித்திருப்பூர் ஊராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் மொத்தம் கோரிய மனைகள் 48 மனைகள், ஒதுக்கிய மனைகள் 55 மற்றும் ஒரு கடை ஆகியவற்றில் (EWSமனைகள் 13-23, 25,26,30-32) EWS மனைகள் உள்பட 55 மனைகளின் மொத்த பரப்பு பார்வை 1-ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் மனைப்பிரிவிற்கு 3% Market Value கட்டணம் ரூ.21,500/-(ரூபாய் இருபத்து ஓராயிரத்து ஐநூறு மட்டும்)

E:\all panchayat lay out\ layout proceding new model

V.S.Sundaravel

0217 Urban Development

60 Other Urban Development Schemes

800 Other receipts

AS-Receipts under land use conversion charges

27-Non Taxation fees

09- Collections.

(DPC:0217-60-800-AS-2790)

என்ற தலைப்பில் பவானி, பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டு ஒரு அசல் செலுத்துச் சீட்டு எண் - 47/25.03.2019 நிலத்தின் உரிமையாளர் ஒப்படைத்துள்ளார்.

எனவே, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளித்திருப்பூர் ஊராட்சி ச.எண். 491/1A-ல் அமையும் 2.67 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு வீட்டு மனையிடங்களுக்கு அமைந்துள்ள 55 மனைகள் மற்றும் ஒரு கடை ஆகியவற்றிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>:

1. சேலம் மண்டலம், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்: 2630/2018/சேம-3, நாள்:21.01.2019-ல் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
3. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளில் வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதி இல்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதேனுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டி இருப்பின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. ஒவ்வொரு மனைப்பிரிவு பத்திர பதிவிற்கும் மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடல் வேண்டும்.
6. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
7. பத்திர பதிவுகள் மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப் பொறுப்பாவார்.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

8. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.

9. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம்.

10. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6X4 அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. E.W.S. மனைகளை உட்பிரிவு செய்யவோ ஒருங்கிணைப்பு செய்யவோ இயலாது.

மேற்குறிப்பிட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரத்தை இரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
அம்மாபேட்டை வட்டாரம்.

**பெறுதல்:**

திரு.சரவணபவா,
பாரதியார் வீதி,
அம்மாபேட்டை, அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம் - 638311..

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம்,
6, சன்னதி தெரு, சுப்பிரமணிய நகர்,
சூரமங்கலம், சேலம் - 636 005.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், அம்மாபேட்டை.
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
4. உதவி இயக்குநர்(நில அளவை), ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
5. தனி அலுவலர், வெள்ளித்திருப்பூர் ஊராட்சி, அம்மாபேட்டை வட்டாரம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate